**1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1. வாதி நல்லபெருமாள் எனது தகப்பனார் ஆவார். எனது தகப்பனார் இவ்வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியும். எனது தகப்பனாரின் இறப்பிற்கு பின்னிட்டு நான் இவ்வழக்கை நடத்திவருகிறேன் என்றால் சரிதான். வாதி நல்லபெருமாளின் 2வது மனைவியின் மகள் என்றால் சரிதான். என் உடன்பிறந்தவர்கள் இருக்கிறார்கள். எனது தகப்பனார் இறப்பிற்கு பிறகு வாரிசு சான்றிதழ் நாங்கள் இதுவரை பெறவில்லை என்றால் சரிதான். நான் வாதியின் வாரிசு என சான்றிதழ் பெறப்படாத நிலையில் இவ்வழக்கை நடத்துவதற்கு எனக்கு அடிப்படை முகாந்திரம் இல்லை என்றால் சரியல்ல. வாதி இவ்வழக்கை பிரதிவாதிகள் முறையற்ற முறையில் பட்டா பெற்றுள்ளதால் வாதியின் உரிமைகோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. தாவா சொத்தின் சர்வே எண்.710/5, 710/4 ஆகும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு எப்படி தெரியும் என்றால் என் தகப்பனார் சொல்லி எனக்கு தெரியும். 1ம் பிரதிவாதி இராமசாமி எனது தகப்பனாரின் உடன்பிறந்த சகோதரர். எனது தகப்பனாருக்கும், 1ம் பிரதிவாதிக்கும் 01.09.1969ல் ஏற்பட்டதாக சொல்லப்படும் பாகப்பிரிவினை பத்திரத்தில் நான் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதற்கு குறிப்பிட்ட காரணங்கள் எதுவும் உள்ளதா என்றால் தாவா சொத்து தனிப்பட்ட சொத்து என்பதால் மேற்படி பாகப்பிரிவினை பத்திரம் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்து எனது தகப்பனார் நல்லபெருமாள் கிரையம் வாங்கிய சொத்தாகும். என்னிடம் காட்டப்படுவது 1958ம் வருடம் கிரையம் பெற்றதாக சொல்லப்படும் பத்திரம் வா.சா.ஆ.1 என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.1ன் அசல் கிரையப்பத்திரத்தை 1ம் பிரதிவாதி எனது தகப்பனாரிடமிருந்து ஏமாற்றி வாங்கிவிட்டதால் சான்றிட்ட நகலை தாக்கல் செய்துள்ளேன்.

3. மேற்படி சம்பவம் தொடர்பாக நாங்கள் காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளோமா என்றால் இல்லை. நான் சொல்வது உண்மை இல்லை என்பதால்தான் காவல்நிலையத்தில் புகார் அளிக்கவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக 1ம் பிரதிவாதி ஏமாற்றி வாங்கிக்கொண்டதாக சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.1ல் சொத்து விவரத்தில் சர்வே எண் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1ல் கிழமேல் 40 கால்அடி, தென்வடல் 85 கால்அடி என பரப்பளவு

குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் குறிப்பிடப்பட்டுள்ள நான்கெல்லைகள் தவறானவை என்றால் சரியல்ல. சர்வே எண் 710/4 மற்றும் 710/5 ஆகியவற்றிற்கு கட்டுப்பட்ட பத்திரம் தான் வா.சா.ஆ.1 என்றால் சரிதான்.

4. மேற்படி சர்வே எண் குறித்து வா.சா.ஆ.1ல் குறிப்பிடப்பட்டுள்ள நான்கெல்லை தவறானவை என்றாலும் வா.சா.ஆ.1ல் குறிப்பிடப்பட்டுள்ள நான்கெல்லைகள் தாவா சொத்திற்கு தொடர்பற்றவை என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.1 தாவா சொத்திற்குரிய ஆவணம் என்றால் சரியல்ல. சர்வே எண்.710/4, 710/5 யை பொறுத்து எனது தகப்பனார் 2017 ம் ஆண்டு எனக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்தார். என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் மேற்படி செட்டில்மெண்ட் ஆவணம் ஆகும். மேற்படி ஆவணம் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (வாதிகள் தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது). மேற்படி பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள சங்கதிகள் உண்மை என்றால் சரிதான்.

5. வா.சா.ஆ.1யை குறிப்பிட்டு தான் பி.வா.சா.ஆ.1 எனது பெயரில் எழுதிவைக்கப்பட்டது என்றால் சரிதான். எனக்கு பி.வா.சா.ஆ.1ன் மூலம் 4718 சதுரடி எழுதிவைக்கப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.1ன் மூலம் எனது தகப்பனார் கிரையம் பெற்றதாக சொல்லப்படும் சொத்தின் பரப்பளவு சுமாராக 2343 சதுரடி தான் என்றாலும், அதற்கு கூடுதலாக பி.வா.சா.ஆ.1 ஆவணம் மூலம் எனது தகப்பனாருக்கு உரிமையற்ற இதர நிலங்களையும் சேர்த்து செட்டில்மெண்ட் எழுதிவைத்துள்ளார் என்றால் சரியல்ல. அதனால் பி.வா.சா.ஆ.1 சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

6. பி.வா.சா.ஆ.1 உடன் தாக்கல் செய்துள்ள அத்தாட்சி சான்றில் கிராம நிர்வாக அலுவலர் என்ற இடத்தில் சுப்புலெட்சுமி என்பவர் கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். 27.10.2016 காலங்களில் கடவூர் வட்டம், பண்ணப்பட்டி கிராமத்தில் பாலமுருகன் என்பவர் தான் கிராம நிர்வாக அலுவலர் தான் பணியில் இருந்தார் என்றாலும், மேற்படி அத்தாட்சி சான்று புனையப்பட்ட ஆவணம் என்றாலும் சரியல்ல. வாதி நல்லபெருமாள் இவ்வழக்கை தாக்கல் செய்தபோது எந்தெந்த ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியும். பிராதுடன் 2வது ஆவணமாக பட்டா எண் 1041 தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தின் புகைப்பட நகல் மட்டுமே தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும், அசல் ஆவணத்தை ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் சிறப்பு காரணங்கள் எதுவும் இல்லை. மேற்படி 2வது ஆவணமாக தாக்கல் செய்யப்பட்ட

பட்டா எண் 1041 புனையப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல.

7. வழக்குரையில் சொல்லியுள்ள சங்கதிகள் பொய் என்றால் சரியல்ல. பட்டா எண் 1041 யை நான் தற்போது தாக்கல் செய்ய தயராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். என்னிடம் காட்டப்படும் பிரமாண வாக்கு்மூலத்தில் 2 வது ஆவணமாக காட்டப்பட்டுள்ள 01.06.2012 குளித்தலை வட்டாட்சியரால் பட்டா மாற்றத்திற்காக வழங்கப்பட்டதாக சொல்லப்படும் உத்தரவு நான் ஏன் தாக்கல் செய்யவில்லை என்பதற்கு சிறப்பு காரணங்கள் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்து கடவூர் வட்டத்தில் உள்ளது என்றால் சரிதான். 2010 ம் ஆண்டு டிசம்பர் மாதமே கடவூர் வட்டத்திற்கு தாலூக்கா அலுவலகம் தொடங்கப்பட்டது என்றாலும், அதனால் 01.06.2012 ம் தேதி குளித்தலை வட்டாட்சியர் பட்டா மாற்றத்திற்கு உத்திரவிட வாய்ப்பு இல்லை என்றாலும், மேற்படி ஆவணம் புனையப்பட்ட ஆவணம் என்பதால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

8. வா.சா.ஆ.3 புனையப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 02.11.2016 ம் ஆண்டு எழுதப்பட்டது என்றால் சரிதான். மேற்படி பி.வா.சா.ஆ.1 தவறுதலாக எனது பெயரில் எனது தகப்பனாரால் எழுதிக்கொடுக்கப்பட்டதாக 1ம் பிரதிவாதி தரப்பில் ஆட்சேபணை செய்யப்பட்டதால்தான் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி சார்பதிவாளர் அலுவலகத்திலும், காவல்நிலையத்திலும் எனது தகப்பனார் மீது புகார் அளித்திருந்தார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி மேற்படி புகாரில் பட்டா எண் 1041 போலியானது என குறிப்பிடப்பட்டு இருந்தது என்றால் சரிதான். இவ்வழக்கை 23.12.2016 ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

9. 02.11.2016 ம் தேதி தாவா சொத்தை எனது தகப்பனார் எனது பெயருக்கு எழுதிவைத்த செட்டில்மெண்ட் குறித்து வழக்குரையில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். பி-வா.சா.ஆ.1 ல் 6 வது பக்கத்தில் எனது தகப்பனார் தாவா சொத்து குறித்து மேற்படி பி.வா.சா.ஆ.1 எழுதப்பட்ட தேதிக்கு பின்னர் எனது தகப்பனாருக்கு பாத்தியம் இல்லை எனவும் தாவா சொத்து குறித்து அதிகாரம் எதுவும் இல்லை எனவும் ஷரத்து உள்ளது என்றால் சரிதான். எனவே வாதிக்கு தாவா சொத்து குறித்து வழக்கு தாக்கல் செய்ய உரிமை இல்லை என்றாலும் வழக்கு மூலம் ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல. சர்வே எண் 710/4 மற்றும் 710/5 ல் ஏற்பட்டுள்ள வருவாய்துறை ஆவணங்களில் இதுநாளதுவரை எனது பெயரோ, எனது தந்தையார் பெயரோ, குறிப்பிடப்பட்ட ஆவணங்கள் எதுவும்

ஏற்பட்வில்லை என்றால் சரியல்ல. என்னால் குறியீடு செய்யப்படாத பட்டா எண். 1041 மற்றும் குளித்தலை வட்டாட்சியர் பிறப்பித்ததாக சொல்லப்படும் உத்தரவு ஆகியவை புணையப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல.

10. வா.சா.ஆ.1 இவ்வழக்கிற்கு தொடர்பற்ற ஆவணம் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கும், நாங்கள் குடியிருக்கும் வீட்டிற்கும் இடையே சுமார் 1 ½ கிமீ உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தில் 1ம் பிரதிவாதி தேங்காய் மண்டி வைத்திருந்தாரா அல்லது அவர் மகன் தேங்காய் மண்டி வைத்திருந்தாரா என்றால் தாவா இடத்தில் எனது அப்பா சைக்கிள் கடை வைத்திருந்தார். அதன்பிறகு தாவா நிலம் தற்போது கீற்று கொட்டகை கிழிந்து காலி இடமாக உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.710/4 ல் தனலெட்சுமி என்பவர் பெட்டிக்கடை வைத்து குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். மேற்படி தனலெட்சுமி இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்காததால் உரிய தரப்பினரை சேர்க்காத தோஷத்தால் இவ்வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சர்வே எண்.710/5 ல் 1ம் பிரதிவாதியும், அவரது மகனும் சுமார் 60 வருடங்களுக்கு மேலாக தேங்காய் மண்டி வைத்திருந்தார்கள் என்றால் சரியல்ல.

11. சர்வே எண். 710/4 யை தனலெட்சுமி அனுபவித்து வரும் நிலையில் மேற்படி சர்வே எண்ணில் உள்ள சொத்தை நான் அனுபவித்து வருவதாக பொய்யாக சொல்லி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2 ற்கும், புலவரைபடத்திற்கும் இடையே வேறுபாடுகள் உள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்து எனது சுவாதீனத்திலும், அனுபவத்திலும் இருந்து வருகிறது என்பதை நிரூபணம் செய்யும் வகையில் இவ்வழக்கில் எந்த ஆவணங்களும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.
S/d. Witness xxxxx
Checked and Uploaded by Typist

S/d.Thiru.S.Pragatheeshwaran,
Additional District Munsif,
Kulithalai.